தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 7438 & 7439 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 23.09.09.**

முன்னிலை : திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் : திரு. ஜே. வேலாயுதம்,
92, போஸ் தெரு,
ஓடத்துறை அஞ்சல்,
கவுந்தப்பாடி,
ஈரோடு மாவட்டம் – 638 455.

பொது அதிகார அமைப்பு : பொதுத் தகவல் அலுவலர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை– 600 005.

-------

மனுதாரர் திரு. ஜே. வேலாயுதம் விசாரணைக்கு வரவில்லை. திருமதி. ஐ. மகபூபா, இணை இயக்குநர் / பொதுத் தகவல் அலுவலர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–5 இவ்வாணையத்தில் இன்று (23.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 29.09.08 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தற்காலிகப் பணி நீக்க காலத்தை சம்பளமில்லா விடுப்பு நாளாக ஆக்குவது குறித்து தகவல் கேட்டுள்ளது

குறித்து வழக்கு எண். 35048/விசாரணை/08 நாள் 21.07.09 அன்று விசாரிக்கப்பட்டு முழுத் தகவலும் கொடுக்கப்பட்டதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இதே தகவல் குறித்து 09.02.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனுவின் மீது வழக்கு எண். 3242 & 3243/விசாரணை/09 நாள் 24.08.09 அன்று விசாரிக்கப்பட்டு மனுதாரருக்கு மேலே குறிப்பிட்டுள்ளபடி முழுத் தகவலும் வழங்கப்பட்டதாக முடிவு செய்து வழக்கு முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் 26.03.09 தேதியிட்ட மனுவும் இதே தகவல் குறித்த மேல்முறையீடு ஆகையால் இவ்வழக்கு ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுள்ளதால் மேல் விசாரணை இன்றி இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.09.09
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

<u>வழக்கு எண். 7438/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை– 600 005

திரு. ஜே. வேலாயுதம்,
92, போஸ் தெரு,
ஓடத்துறை அஞ்சல்,
கவுந்தப்பாடி,
ஈரோடு மாவட்டம் – 638 455.

நகல் வழக்கு எண். 7439/09